திரு எம். ஆர். கண்ணன்: தற்போது பலர் கோயில் வீடுகளில் குறைந்த வாடகைக்கு இருந்துகொண்டு அந்த நிலத்தையெல்லாம் உபயோகித்து வருகிறார்கள். இதைப் பற்றி ஒரு சர்வே செய்து இந்த முறைகளை நல்லபடி திருத்தியமைக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தனிக் கேள்வி போடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) மண்ணெண்ணெய் பங்கீட்டு முறையில் திடீர் மாறுதலும் வண்டிக்காரர்கள் வேலை இழப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

'I move that this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the sudden order of the Commissioner of Civil Supplies re-orienting the distribution system of kerosene oil resulting in the unemployment of nearly three thousand kerosene oil cart pullers'

என்று அறிவிக்கையில் கண்டிருக்கிறது. இது இந்த அரசின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உட்பட்டது. மேலும் உறுப்பினர் அவர்களுக்கு வருகிற மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பிருப்பதால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) மதுரை தியாகராயர் கல்லூரி மாணவர்கள் கல்லூரி தின விழாவில் தேசியகீதம் பாடுவதைத் தடுத்தது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

'That the business of the Assembly do stand adjourned for the purpose of discussing a definite matter of urgent public importance, namely, that the students of the Thyagaraja College, Madurai, have prevented the National Anthem being sung on 9th March 1969 at the conclusion of the College Day Celebrations while the Tamil Nadu Education Minister was presiding over that function'

என்று அறிவிக்கையில் இருக்கிறது. இது எப்படி இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிப்பதற்குரியது என்பது பற்றி மட்டும் அவர்கள் விளக்கக் கோருகிறேன்.

* **திரு ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, 9-3-1969-ம் தேதி அன்று நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் உயர்திரு மாதவன் அவர்கள் அந்தக் கல்லூரி காலேஜ் டேயில் தலைமை தாங்கி நடத்திய தாகவும் கடைசியாக தேசீய கீதம் பாடுவதற்கு முன்னடியாக ஒரு சிலர் அந்த மேடையில் புகுந்து தேசிய கீதம் போடுவதை தடைசெய்ததாக நான் கேள்விப்பட்டேன். இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் ஆங்காங்கு நடைபெறுமானால் இந்தத் தேசத்தின் ஒற்றுமையை அது குலைக்கும் என்ற காரணத்தினால் அதிலும் குறிப்பாக நாம் நாட்டு வணக்கம் பாடுகிற ஒரு மரபை நம் மாணவர்களானாலும் சரி அல்லது தேசத் தலைவர்